**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 201 of 2024

DATE : 08.07.2025

Depositions of witness for Prosecution

PW: 3

| | | | |
|---|---|---|---|
| Name | சின்னராஜ் | Caste | |
| Father/Husband's Name | கருப்பையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of July 2025

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

1) நான் தற்போது கூமாபட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1–ஐ தெரியும். தேதி, மாதம் ஞாபகம் இல்லை 2018–வது வருடம் அர்ச்சனாபுரம் நல்லதங்காள் கோவில் அருகில் உள்ள தோட்டத்தில் நானும் சிவமணி என்பவரும் தண்ணீர் பாய்த்து கொண்டிருந்தோம் காலை சுமார் ஒன்பது மணி அளவில் ஆஜர் எதிரி அ.சா.1 தோட்டத்திற்கு நுழைந்து 25 வாழைக்குலைகளை வெட்டி எறிந்தார். நான் தடுக்க முயன்ற போது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ வரச் சொல்லுமாறு கூறினார். இது தொடர்பாக நான் அசா1 க்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்தேன். சம்பவ இடத்திற்கு அ.சா.1 வந்தார். ஆஜர் எதிரி மீண்டும் நான்கு நாட்கள் கழித்து தோட்டத்திற்கு வந்து வாழைக் குலைகளை வெட்டினார். அதை அ.சா.1 தடுக்க போனபோது ஆஜர் எதிரி அரிவாளை காண்பித்து மிரட்டி தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டினார் இது சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும் இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. ஆதலால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு